செ.வெ.எண்: 709 நாள்: 06.12.2020

**புதுக்கோட்டை மாவட்ட பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் கணினி பயிற்றுநர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் கணினி பயிற்றுநர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் தொகுப்பூதியம் அடிப்படையில் கணினி பயிற்றுநர் பணியிடத்திற்கு கீழ்கண்ட தகுதியுள்ள நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் தொகுப்பூதியம் அடிப்படையில் ஒரு கணினி பயிற்றுநர் பணியிடத்திற்கு ஊதியம் ரூ.15,000 என்ற ஊதியத்தில் தற்காலிகமாக நரப்பப்படவுள்ளது.

இப்பணிக்கு B.Ed கல்வித்தகுதியுடன் B.E (Computer Science), B.Sc (Computer Science), B.C.A., B.Sc (Information Technology) ஏதாவது ஒரு பட்டப் படிப்பு முடித்திருக்க வேண்டும். வயது உச்ச வரம்பு இல்லை. பார்வையற்றோர் பள்ளி என்பதால் இம்மானவர்களுக்கு பயிற்றுவிக்க உரிய கூடுதல் கல்வி தகுதியுடைய பார்வையற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விண்ணப்பத்துடன் கல்விச் சான்று, சாதிச் சான்று, குடும்ப அட்டையின் நகல், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டையின் நகல், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம்

ஆகியவற்றுடன் தலைமை ஆசிரியர், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, MLA அலுவலகம் அருகில், புதிய பேருந்து நிலையம், புதுக்கோட்டை 622001 என்ற முகவரிக்கு 11.12.2020 அன்று பிற்பகல் 5 மணிக்குள் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கிடைக்கும்படி அனுப்பி வைக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**